www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
# Thamil Eelam Liberation Organization

## பொது மக்களே !
## புலி இயக்க ஆதரவாளர்களே !

15 வருடங்களாக தமிழ் ஈழ விடுதலைக்காக உழைத்த ஒருவனை,
சிறீலங்கா இனவெறி அரசினால் தலைக்கு 10லட்சம் விலைவைக்கப்பட்ட ஒருவனை,
இவ்வளவு ராணுவ நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் ஈழ மண்ணில் நின்று போராடிவந்த ஒருவனை,
அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடினால் மட்டுமே சிறீலங்கா இனவெறி அரசுக்கு பலத்த அடி கொடுக்க முடியும் என செயற்பட்ட தலைவனை,

அடிக்க அடிக்க படுகொலை செய்தது சரியான செயல்என ஏற்கிறீர்களா?

எந்த மக்கள் மத்தியில் விடுதலை வேண்டும் என்பதற்காக தனது உயிரை துச்சமென மதித்து அம் மக்களோடு வாழ்ந்து போராடிவந்தாரோ , அந்த மக்கள் அவனுக்காக ஒரு மரண ஊர்வலத்தைக் கூட நடத்த அனுமதிக்காது, உடனே தீயிட்டு சாம்பராக்கினீர்களே! இது நியாயமானதா?

300 இற்கு மேற்பட்ட இளம் போராளிகளையும், ஆதரவாளர்களையும் கொடூரமான முறையில் கொன்று குவித்தது சரியான செயலென உண்மையிலேயே நம்புகிறீர்களா?

தாய்மார்களே, ஒரு குழந்தையைப் பெற்று வளர்க்கும் போது ஒவ்வொரு தாயும் எத்தனை இலட்சியக் கனவுகளோடு வளர்த்திருப்பாள்.
இவ்வாறு வளர்க்கப்பட்ட இப் போராளிகள் அநியாயமான முறையில் கொல்லப்படுவதை கேட்ட அவள் என்ன பாடு பட்டிருப்பாள்.?
பதவி வெறியினால் கொடூரமாகக் கொன்று குவித்தது மாத்திரமல்ல , அவனை [illegible]றுமல்லவா சொல்கிறார்கள். இது எப்பேர்ப்பட்ட கொடுமை?
'<u>ரெலோ' இயக்க போராளிகளைக் கொன்று குவிப்பதற்காக</u>

நவீன ரக ஆயுதங்கள், ரொக்கற் லோஞ்சர்கள் போன்றன பாவிக்கப்பட்டுள்ளன. அதிகார வெறியினால் நடத்தப்பட்ட இவ் வேள்வியில் புலி இயக்கப் போராளிகளிலும் பலர் கொல்லப்பட்டுள்ளார்களே,

இதைவிட இப்படுகொலைக்கான மொத்தச் செலவு 750,000 பவுண்கள் ( 3கோடிருபா) என மதிப்பிடப்பட்டுள்ளதே,
இத்தனையும் தெரிந்திருந்தும் மீண்டும் நீங்கள் கொடுக்கும் பணத்தில், தமிழ் ஈழத் தெருக்களில் இதிலும் கொடூரமான முறையில் ஏனைய போராளிகள் கொன்று குவிக்கப் படுவார்கள், உயிருடன் எரிக்கப்படுவார்கள் என்பதும் தெரிந்திருந்திருந்தும் இப்போதும் ஒன்றுமே அறியாதவர்கள் போல தொடர்ந்தும் செயற்படப்போகிறீர்களா?
இப் படுகொலைகளுக்கும் நீங்கள் உடந்தையானவர்கள் என உணரவில்லையா?
உணர்ந்தால் இனிமேல் செயற்படுவீர்களா?
புலி இயக்கத்தின் உண்மை சொரூபம் தெளிவாக தெரிந்த பின்னரும், புலி இயக்கம் மட்டும் தான் போராடுகிறது என அவர்கள் உருவாக்கத்துடிக்கும் போலிக் கதைக்காக அவர்களுக்கு ஆதரவளிக்க எண்ணுகிறீர்களா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அனைத்து இயக்கங்களும் இணைந்து செயற்பட்டதன் காரணமாக கூலிப்படைகள் முகாம்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்களே,
சிறீலங்கா கூலிப்படைகள் 'ரெலோ' இயக்கத்தின்மேல் ஏற்பட்ட பெரும் சேதத்தின் பின்னர் தான், போராட்டம் பலவீனமாகிவிட்டதை உணர்ந்து சிறிதாக யாழ். குடாவின் பல்வேறு பகுதிகளில் முகாம்களை பெருமளவில் அமைத்து வருகிறார்களே,
இந்த நிலைமையிலும் இவர்களால் மட்டும் மக்களைக் காப்பாற்ற முடியுமென எண்ணுகிறீர்களா ? அல்லது இவர்களின் பைத்தியகாரத்தனமான தாக்குதல்களும், நடவடிக்கைகளும் விடுதலையைத் தந்துவிடும் என நம்புகிறீர்களா?
சொந்த மக்களையே கொன்ற பின்னர் மகிழ்ச்சி கோசம் போடும் இவர்களா மனித விடுதலையை பெறப்போகிறார்கள்? இத்தகைய செயல்கள் கேவலமான, அருவருக்கத்தக்க செயல் என எண்ணவில்லையா?

தேசப்பற்றுள்ள தமிழ்பேசும் மக்களே!

சிறீலங்கா இனவெறி அரசினை தோற்கடிப்பதானால்

அனைத்து சக்திகளும் அணிதிரட்டப்பட வேண்டும்.

எம்மை நாமே கொலைசெய்யும் அராஜகம் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இதனை செயற்படுத்த நீங்கள் இதில் பங்களிக்கவேண்டும்.

1. நடந்த கொடூரமான படுகொலைகள் இனிமேலும் இடம்பெறுவது தடுக்கவேண்டும். புலிகள் இயக்கத்தின் இத் தவறுகள் நிவர்த்திசெய்யப்படுதல் அவசியமாகும்.
2. பொதுவான ஒரு விசாரணையின்றி இது சாத்தியமில்லை. எனவே பொது விசாரணை ஒன்றிற்கு இவர்கள் உடன்படவில்லையென்றால் மீண்டும், மீண்டும் ஒரிருவரின் பதவிகளைக் காப்பாற்ற படுகொலைகளைச் செய்வார்கள்.
3. இத்தகைய பொது விசாரணைக்கு உடன்படாத வரை நீங்கள் கொடுக்கும் சகல உதவிகளையும் நிறுத்துங்கள்.

புலிகள் இயக்கம் இத்தகைய கொடிய செயற்பாட்டினை நிறுத்தாத வரை மக்களின் ஜனநாயக உரிமைகள் வென்றெடுக்க முடியாது.
சகல கருத்துகளையும், விருப்பங்களையும், வெளிப்படுத்தக்கூடிய ஓர் ஜனநாயக அமைப்பினை கட்டியெழுப்ப, அதன் அடிப்படையில் உருவாகும் ஒற்றுமையின் மூலமே, போராட்டத்தினை எடுத்துச்செல்லலாம். தமிழீழ விடுதலையை சாத்தியமாக்கலாம்.

" ஒற்றுமைக்காக உங்கள் உழைப்பையும், ஆதரவையும் நல்குங்கள். "

" அரசியல் அராஜகத்தை புறத்தொதுக்குங்கள்"

" பரந்த ஜனநாயக முன்னணியை கட்டியெழுப்ப உங்கள் ஆலோசனையை தாருங்கள். "

" சிந்திப்போம் .....விமர்சிப்போம் ...... செயற்படுவோம்..... "

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்